**செ.வெ. எண் : 434** **நாள் : 12.7.2007**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொதுப்பணித் துறையின் கீழ் உள்ள நீர்வள ஆதார அமைப்பு மற்றும் கட்டிடத் துறை ஆகிய பிரிவுகளின் கீழ் நடைபெறும் பணிகளின் முன்னேற்றம் குறித்து இன்று (12.7.2007) மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர், துறைச்செயலாளர் மற்றும் பொறியாளர்களுடன் ஆய்வு செய்தார். ஆய்வின்போது, தற்போது நடைபெற்றுவரும் பதினெட்டாம் கால்வாய்த் திட்டம், 58 கிராமக் கால்வாய் திட்டம், மலட்டாறு (கமுதி) அணைக்கட்டு திட்டம், இருக்கன்குடி நீர்தேக்கத் திட்டம், மாம்பழத்துறையார் நீர்தேக்கத் திட்டம் ஆகிய திட்டப்பணிகளை துரிதப்படுத்தி முடித்திடத் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் சீற்றத்தின் காரணமாக பாதிக்கப்படும் பகுதிகளில் வாழும் மக்களை பாதுகாப்பதற்காக ராமன்துறை, ராஜாக்கமங்கலம் துறை, கோடிமுனை, வாணியக்குடி ஆகிய கிராமங்களில் கடலோர கற்சுவர்கள் ரூ.2.35 கோடி செலவில் கட்டுவதற்கு முதலமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளார். இப்பணிகளையும் விரைவில் துவங்கி முடித்திடத் தீர்மானிக்கப்பட்டது. மேலும், தூத்துக்குடி மாவட்டத்தில் இடிந்தகரை, திரேசாபுரம் ஆகிய இடங்களில் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் செய்வதற்காக ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட பணிகளுக்காக ரூ.13.30 கோடியினை நிதி ஒதுக்கீடு செய்திட முடிவெடுக்கப்பட்டது.

சென்னை மாநகரத்தில் வரும் மழைகாலங்களில் ஏற்படக்கூடிய வெள்ளம் மற்றும் தண்ணீர் தேங்குதல் ஆகியவற்றை தவிர்த்து விரைவில் மழை நீர் வடியும் வகையில் பொதுப்பணித்துறையின் பொறுப்பில் உள்ள ஆறுகள் மற்றும் கால்வாய்களில், முன்னெச்சரிக்கையாக தூர்வாரி அடைப்புகளை நீக்கும் பணிகளுக்காக ரூ.4 கோடி அளவில் நிதி ஒதுக்கீடு செய்திட முடிவெடுக்கப்பட்டது.

**தமிழகத்தில் ரூ.2547.00 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி நிதியுதவியுடன் எடுத்துக்கொள்ளப்பட உள்ள நீர்வள நிலவள திட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள 127 துணை வடிநிலங்களில் 63 துணை வடிநிலங்களில் உள்ள 5763 ஏரிகள் உட்பட அனைத்து அணைக்கட்டுகள், கால்வாய்கள் மற்றும் நீர்பாசன கட்டுமானங்களையும் சீரமைத்து மேம்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. நடப்பாண்டில் ரூ.191 கோடி நிதி ஒதுக்கீட்டில் 12 துணை வடிநிலங்களில் 2072 ஏரிகள் உட்பட நீர்பாசன அமைப்புகளும் ஏரிகளும் மேம்படுத்தப்படும். இப்பணிகளை விரைவில் துவக்கி வேகமாக செயல்படுத்திட முடிவெடுக்கப்பட்டது.**

**தமிழ்நாட்டில் உள்ள ஏரிகளை பாதுகாக்கும் பொருட்டு சென்ற சட்டமன்ற தொடரில் இயற்றப்பட்ட “தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றும் சட்டம் 2007”க்கான விதிகளை உடனடியாக தீர்வு செய்து செயலாக்கத்திற்கு கொண்டுவருவதென்று முடிவு செய்யப்பட்டது.**

**அரசுத் துறைகளுக்கான கட்டடப் பணிகள் அனைத்தையும் செயல்படுத்தி வரும் பொதுப்பணித்துறையின் கட்டட அமைப்பின் கீழ் நடைபெறும் பணிகளைப் பொருத்தவரை இந்த ஆண்டில் ரூ.738 கோடி செலவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பணிகளான தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், சுனாமி பணிகள், நபார்டு பள்ளிக் கட்டடப் பணிகள், 2006–07 மற்றும் 2007–08 பகுதி –II திட்டங்கள் ஆகியவற்றினை விரைந்து முடித்திடத் தீர்மானிக்கப்பட்டது.**

**உடனடியாக எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் முக்கிய பணிகளான மாநில மைய நூலகம், விழுப்புரம், தருமபுரி மற்றும் திருவாரூர் ஆகிய இடங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கான கட்டடங்கள், 200 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய சட்டப்பேரவை வளாகம், 42 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மருத்துவமனைப் பணிகள், 13 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 10 வட்டாட்சியர் அலுவலகங்கள் ஆகிய முக்கியப் பணிகளை விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டது.**

* * * * *

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை -9.